இல. கிரிக்கெட் குழுவில் குழப்பம் கப்டன் அர்ச்சுன

விலை ரூபா 5-00

ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 36 திருவள்ளுவர் ஆண்டு 2025 பங்குனி 26 இதழ் 57
யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 8-4-1994

இராஜினாமா!

(தொழும்பு)
இலங்கை கிரிக்கெட் குழுவின் கௌரவ தலைவரான அரவிந்த டி சில்வாவை ஷார்ஜாவில் நடைபெறவுள்ள "ஒஸ்ட்ரலேசியா" போட்டியிலிருந்து நீக்கியதையடுத்து இலங்கை கிரிக்கெட் குழுவில் பெரும் குழப்பநிலை ஏற்பட்டுள்ளது. இதனையடுத்து இலங்கை கிரிக்கெட் அணித் தலைவரான

(8-ம் பக்கம் பார்க்க)

11 லட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு இல்லை!

- அமைச்சர் மல்லிமாராச்சி

(தொழும்பு)
பயிலுநர்கள் உட்பட 11 லக்சம் பேர் இன்று இந்த நாட்டில் வேலையாய்ப்பின்றி இருக்கின்றனர்.
உணவு கூட்டுறவுத்துறை இணைவிய அமைச்சர் வீரசிங்க மல்லிமாராச்சி நேற்று நாடாளுமன்றத்தில் உரையாற்றிய போது இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் உரை

(4-ம் பக்கம் பார்க்க)

போதைப்பொருள் பாவனையில் இலங்கைக்கு உலகில் முதலிடம்

பாடசாலை மாணவர்-பெண்கள் அதிகளவு பாதிப்பு!

(கொழும்பு)
உலகில் எந்த ஒரு நாட்டையும் விட இலங்கையிலேயே அதிகளவு போதைவஸ்து பாவிக்கப்படுகின்றது. பாடசாலை மாணவர்கள் உட்பட பெண்கள் அதிகளவில் இந்த போதைவஸ்துப் பாவனைக்கு இன்று அடிமையாகியுள்ளனர். போதைப் பொருள் தடுப்புப் பணியகத்துக்குப் பொறுப்பான பொலிஸ் மாஅதிபர் அன்ரன் ஜெகன்ஞதன் இதனைத் தெரிவித்துள்ளார்.

இதுபற்றி பொலிஸ் அதிபர் ஜெயநாதன் மேலும் தெரிவிக்கையில்,
போதைப்பொருள் பாவனையில் பாடசாலை மாணவர்களே கூடுதலாக ஈடுபடுகின்றார்கள். குறிப்பாக 16 வயதுக்குட்பட்ட பாடசாலை மாணவர்களே போதைப் பொருளுக்கு அடிமையாகி யுள்ளனர்.
இலங்கையில் கணிசமான

(2-ம் பக்கம் பார்க்க)

மலையகப் பகுதியில் அகோர விமானத்தாக்குதல்

(முல்லைத்தீவு)
முல்லைத்தீவு மாவட்டத்தின் மலையகப் பகுதியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை கொடூர விமானக் குண்டு வீச்சு மற்றும் ஹெலிகொப்டர்விருந்து நடாத்தப்பட்ட துப்பாக்கிச் சூடுகள் மேற்கொள்ளப்பட்டன.
கொமா செக்டு குண்டுவீச்சு விமானங்கள் மற்றும் ஹெலிகொப்டர்கள் இத்தாக்குதல்

(4-ம் பக்கம் பார்க்க)

தமிழீழ பொதுக்கல்வித் தேர்வு: சிறப்பாகத் தேறிய மாணவர்க்கு இன்று பரிசுகள்

(யாழ்ப்பாணம்)
தமிழீழ கல்வி கலைப்பாடுப் பேரவையால் ஆண்டுதோறும் நடாத்தப்படும் தமிழீழ பொதுக் கல்வித் தேர்வில் தேசிய, கோட்ட மட்டங்களில் கூடுதல் புள்ளிகளைப் பெற்ற மாணவர்களுக்கு தமிழீழ தேசிய தலைவர் திரு. வே. பிரபாகரன் வழங்கும் பணப் பரிசுகளும் பாராட்டுச்

(4-ம் பக்கம் பார்க்க)

திருமலையில் 'நந்தி மித்ர' ராணுவ நடவடிக்கை

(கொழும்பு)
திருமலை கிளைக்கிணியா பகுதியில் 'நந்தி மித்ர' என்ற இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக இராணுவ வட்டாரங்கள் நேற்றுத் தெரிவித்தன.
இதேவேளை திருமலை முத்துச்சேனை என்ற பகுதியில் படையினர் மேற்கொண்ட நடவடிக்கையில் ஈடுபட்டதாகவும் பெருமளவு தகுப்புகள் இந்நடவடிக்கையில் ஈடுபட்டதாகவும் அவ்

(4-ம் பக்கம் பார்க்க)

மத்திய ஆபிரிக்காவின்

இரு நாட்டு ஜனாதிபதிகள் விமானம் சுடப்பட்டு கொலை!

(லண்டன்)
றுவாண்டா, புறூண்டி ஆகிய இரு மத்திய ஆபிரிக்க நாடுகளின் ஜனாதிபதிகள் நேற்று விமானத்தில் பயணம் செய்து கொண்டிருந்தபோது விமானம் சுடப்பட்டதில் இருவரும் பலியாகினர்.
றுவாண்டா, புறூண்டி ஆகிய இரு நாடுகளிலும் ஏற்பட்டுள்ள இன மோதல்களையும், தீவிரவாதத்தையும் முடிவுக்குக் கொண்டுவரும் விதத்தில் தன்சானியா தலைநகரில் சமாதான பேச்சுக்களை நடத்திவிட்டு நாடு திரும்புகையில் அவர்கள் பயணம்செய்

(4-ம் பக்கம் பார்க்க)

றுவண்டாவில் துப்பாக்கி மோதல்

(லண்டன்)
மத்திய ஆபிரிக்க நாடான றுவண்டாவில் பெரும் துப்பாக்கி மோதல்கள் இடம்பெற்றுவருவதாக செய்திகள் தெரிவிக்கின்றன.
றுவண்டா புறூண்டி ஆகிய இரு நாடுகளுக்கு ஜனாதிபதிகளுக்கு பயணம்செய்த விமானம்நேற்று ருக்கு தாக்குதலுக்குள்ளாகி வெடித்துச் சிதறியதையடு

2-ம் பக்கம் பார்க்க)

யோதலை பல்கலைக்கழக விவகாரம்: எதிரணி கோரிய வாதத்திற்கு அரசு அனுமதி மறுப்பு!

(கொழும்பு)
யோதலை பல்கலைக்கழகத்தை மூடியது தொடர்பாக விவாதிப்பதற்கு எதிரணி கோரியிருந்த யோசனையை மறுக்க முடியாதுள்ளது என அரசாங்கப் பேச்சாளரான அமைச்சர் விஜேயதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.
இந்த தகவலை நேற்று முன்தினம் அமைச்சர் லக்ஷ்மன் தமக்குத் தெரிவித்ததாக எதிர்கட்சியின் பிரதான அமைப்பா

(4-ம் பக்கம் பார்க்க)

அரசின் ஊழல் நடவடிக்கை: படை அதிகாரிகள் விசாரணை

(கொழும்பு)
ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சிக் காலத்தில் அரசின் திட்ட அமுலாக்கல் உத்தியோகஸ்தர்களாக மேற்கொள்ளப் பட்டதாகக் கூறப்படும் ஊழல் நடவடிக்கைகள் குறித்து இப்போது விசாரணை செய்யப்பட்டுவருகிறது.
ஓய்வு பெற்ற பொலிஸ், இராணுவ அதிகாரிகளைக்கொண்ட குழு ஒன்று இந்த விசார

(4-ம் பக்கம் பார்க்க)

அகதி முகாம்களுக்கு வெளியே உள்ள

ஈழ அகதிகள் நாடுதிரும்ப தமிழக அரசு இலவச பயணவசதி

(கொழும்பு)
தமிழ்நாட்டில் அகதி முகாம்களுக்கு வெளியே தங்கியுள்ள இலங்கைத் தமிழ் அகதிகளை இலவச பிரயாண வசதிகளுடன் இலங்கைக்குத் திருப்ப அனுப்பப்போவதாக தமிழக அரசு அறிவித்துள்ளது.
இவர்கள் பற்றிய விவரங்களை எதிர்வரும் 10ம் திகதிக்கு முன் தனக்கு தெரிவிப்படுத்த மாறு தமிழக அரசு கோரி யுள்ளது.
இந்த அகதிகள் தங்கியுள்ள மாவட்டங்களைச் சேர்ந்த மாவட்ட கலெக்டர்கள் இவர்கள் சம்பந்தமான விபரங்க

(4-ம் பக்கம் பார்க்க)

நவசமசமாஜக் கட்சி உறுப்பினர் சிறிமா முன்னிலையில் சுதந். கட்சியில் இணைந்தார்

(கொழும்பு)
நவசமசமாஜக் கட்சியைச் சேர்ந்த சப்பிரமுதுவரவை சபை அங்கத்தவரான கிறிபால கிரிஎல்ல அக்கட்சியிலிருந்து விலகி நேற்று ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியில் சேர்ந்து கொண்டார்.
எதிர்க்கட்சித் தலைவி திரு

(4-ம் பக்கம் பார்க்க)

வரிவிளம்பரம்

விற்பனைக்கு

1 நாள் புறோயிலர் கோழிக் குஞ்சு உடன் விற்பனைக்குண்டு ஆஷா கோழிப்பண்ணை, 1-ம். லேன், பிரதான வீதி, பருத்தித்துறை. (கி 931)

O/L கணிதம் 94

Distinction, Credit பெற மேற்படைய இதுவரையும் கிற்தியடைவதோரும் (ஆண்டு-9 10) உயர்தர வகுப்பிற்கு ஆசிரியர் B. Sc 85. சிவன் கோவிலடி. திருநெல்வேலி. (கி-942)

1994 - 1995 புத்தாண்டுப் பலன்கள்

(சதுரவின்) எல்லா இராசிகளின பலாபலன்கள் ரூ. 10/- எங்கும் விற்பனையாகின்றது. பாடசாலை புத்தகங்கள், உபகரணங்களுக்கு தினேஷ் புத்தகசாலை, பஸ் நிலையம், யாழ்ப்பாணம். (கி-944)

பயிற்சி வகுப்புகள்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி சுருக்கெழுத்துக் கழகம் வழங்கிய தமிழ், ஆங்கில மொழிகளில் சுருக்கெழுத்து தட்டச்சுப் பயிற்சி வகுப்புகளை எதிர் வரும் 17-ந் திகதி ஆரம்பிக்கவுள்ளது

க.பொ.த (சா/த) பரீட்சையில் மொழி உயர்பட்ட பாடங்களில் சித்தியடைந்த பாடசாலையை விட்டு விலகி மேல் இப்பயிற்சி வகுப்பில் சேர்ந்து கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது. (கி)

மண்ணெண்ணை விநியோகம்

(யாழ்ப்பாணம்)

யாழ் கொழும்பு நுட்பக்கல்லூரி மாணவர் அவையினால் இன்று 8-ந் திகதி வெள்ளிக்கிழமையும் 10-ந்திகதி ஞாயிற்றுக்கிழமையும் இறுதிப் வாரட்சைக்கு விண்ணப்பித்த மாணவர்களுக்கு மண்ணெண்ணை விநியோகம் செய்யப்படவுள்ளது. (59)

இன்றைய உதைபந்தாட்டம்

(யாழ்ப்பாணம்)

ஆதரவற்ற சிறுவர்களின் வளர்ச்சிக்காக ராஜி கிக்கர்ஸ் நடாத்தும் மின்னொளியிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி சென். ஜோன்ஸ் கல்லூரி மைதானத்திலே நடைபெற்று வருகிறது.

இன்றைய முதல் ஆட்டம் மாலை 7 மணிக்கு ஆரம்பமாகும். இதில் சென். மேரிஸ் எதிர் விநாயகர் 2ம் ஆட்டத்தில் (8-15 மணி) டான் மனிஸ் எதிர் சிறுமலை நட்சத்திரங்களும் மோதுகின்றன -கி

கோமாரி வருகிறது

(யாழ்ப்பாணம்)

கொழும்புத்துறைமுகத்திலிருந்து கால்நடைகளைப் பொருட்களை ஏற்றிக்கொண்டு கோமாரி கப்பல் வருத்தித்துறை நோக்கி இன்று விரைந்திருக்கிறமை புறப்படுமென யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் கொழும்பிலிருந்து அறிவித்துள்ளார்.

ஓய்வுக்கு நேற்று முன்தினம் வருத்தித்துறை நோக்கிப் புறப்படவிருந்த போதிலும் கொழும்பில் ஏற்பட்ட கடும் மழை காரணமாக புறப்படுவதற்கு தாமதமாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (162)

பாதுகாப்பு வரியை நீக்கக் கோரிக்கை

(தொழும்பு)

வடக்கு கிழக்கு புத்தத்துக்காக அறவிடப்படும் 3 வீத பாதுகாப்பு வரியை நீக்குமாறு தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் அரசாங்கத்தை கேட்டுள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் நடந்த கூட்டத்தி லேயே இது பிரஸ்தாபிக்கப் பட்டதாம் என்றுத் தெரிவிக்கப்படுகிறது.

பாதுகாப்பு வரியை நீக்குமாறு பல தடவை கோரிக்கை விடப்பட்டு வந்த போதும் அது நிராகரிக்கப்பட்டதும் தெரிந்ததே; (ம - இ)

பாடசாலை மாணவருக்கு இலவச சீருடைகள்

(கொழும்பு)

இந்த ஆண்டுக்கான பாடசாலை மாணவர்களின் சீருடைகள் யூன் மாதம் 27-ந் திகதி விநியோகிக்கப்பட இருக்கின்றன.

நாட்டில் உள்ள 45 லட்சம் மாணவர்களுக்கும் 4000 பிக்கு மாணவர்களுக்கும் இந்தச் சீருடைகள் கிடைக்கவிருக்கின்றன.

இதற்காக அரசாங்கம் 41 கோடி ரூபாவுக்கு மேல் செலவிடுகின்றது என்று கல்வி அமைச்சு அறிவித்துள்ளது. (ம - இ)

12-வது வெற்றுப் போத்தல் பரிசு குலுக்கல் போட்டியில்

பரிசு பெற்றோர் இலக்கங்கள் வருமாறு			
521	2629	3956	5501
522	3238	3962	6012
524	3248	4127	6013
1837	3820	5226	6016
1842	3858	5227	6023
1843	3934	5235	6026
1853	3938	5239	6029
1854	3953	5240	6039
2534	3954	5242	6042
2622	3955	5357	6048

13-வது போட்டியில் இன்றே பங்கு பற்றுங்கள் பங்குபற்றுவதற்கான நிபந்தனை: ஐந்து போத்தல் அல்லது பியர் ஏதாவது 5 போத்தல்களைக் கொடுத்து அதற்கான பணத்துடன் ஒரு அதிர்ஷ்ட லாபச் சீட்டையும் பெற்றுக்கொள்ளுங்கள்.

TASTE LINE INDUSTRIES
(Pvt.) Ltd,
14, Seenier Lane, Jaffna.

(ஏ-3968)

போதைப்பொருள்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

அளவு பெண்களும் போதைப் பொருள் பாவனைக்கு அடிமையாகிவிட்டார்கள்.

1989-ம் ஆண்டு இலங்கையில் போதைப்பொருள்

இலங்கை கிரிக்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கிரிக்கெட் ரணதுங்கா ராஜினாமா செய்துள்ளார். ஷாஜா போட்டியில் நாம் வெற்றி கொள்ளப் போவதில்லை எனவும் அவர் அறிவித்துள்ளார்.

இதேவேளையில் இந்த விவகாரத்தின் காரணமாக கிரிக்கெட் தெரிவுக்குழுவிலுள்ள ஏழு அங்கத்தவர்களில் ஐந்து பேரும் தெரிவுக்குழுவிலிருந்து ராஜினாமா செய்துள்ளனர்.

இவர்கள் தமது ராஜினாமா கடிதங்களை விளையாட்டுத் துறை அமைச்சர் நந்தா மத்தியூவிடம் சமர்ப்பித்துள்ளனர்

கிரிக்கெட் அணியிலுள்ளவர்களின் உடற்தகுதி காணப்படுவது சம்பந்தமான பரிசோதனை ஒன்றே இந்தப் பிரச்னைக்கு காரணமென்று தெரிவிக்கப்பட்டது.

இந்தப் பரிசோதனையின் போது அரவிந்த டி சில்வா உட்பட பல ஷாஜா போட்டியில் வெற்றி கொள்ள தகுதியில்லையென அணியிலிருந்து நீக்கப்பட்டனர்

உடற் தகுதி கண்டு கிரிக்கெட் ஆட்டக்காரர்களைத் தெரிவு செய்தது முற்றும் தவறானது அரவிந்த டி சில்வா போன்ற இறைமையான ஆட்டக்காரரை அணியிலிருந்து நீக்கியிருப்பதை நான் எந்த விதத்திலும் ஏற்றுக்கொள்ள முடியாது என அர்ச்சுன ரணதுங்கா தெரிவித்துள்ளார்.

கிரிக்கெட் தெரிவுக்குழுவின் அங்கத்தவர்களான துலிப் மெண்டிஸ், ரோய்டன்ஸ், ரஞ்சன் மடுகல்ல, தயா சமபத்து, கே. தெரசன் ஆகியோர் கிரிக்கெட் தெரிவுக் குழுவிலிருந்து ராஜினாமா செய்துள்ளனர்.

இந்த நிலையில் இலங்கை அணிக்கு அடுத்தவாரம் ஷாரி ஜாவில் நடைபெறவுள்ள ஒஸ்ட்ரேலியா போட்டியில் கலந்து கொள்ள அனுமதி வழங்கப்படுமா என்பது கேள்விக்குறியே.

ஏனெனில் இந்தப் போட்டியில் சர்வதேச தரம் வாய்ந்த அணி ஒன்றையே கலந்து கொள்வதற்கு அனுமதி வழங்கிவருவது என்பது போட்டியின் முக்கியவிதிகளுள் ஒன்றாகும். -இ-வி

பாவனையாளர்கள் 2646 பேர் இருந்தனர். 1992-ம் ஆண்டு 14 ஆயிரத்து 43 ஆக இந்தத்தொகை அதிகரித்துவிட்டது.

போதைப்பொருள் பாவனையில் 1989ல் ஆண்கள் பெண்களின் தொகை 219 ஆக இருந்தது இந்தத்தொகை 1992 ஆம் ஆண்டு ஆயிரத்து 104 ஆக உயர்ந்துவிட்டது. 1994ம் ஆண்டு மேற்கூறப்பட்ட புள்ளி விபரம் அதிகரித்துக் காணப்படுகின்றது.

இந்தியா, பாகிஸ்தான் போன்ற நாடுகளிலிருந்து வரவழைப்பட்ட போதைப்பொருள் கள் இலங்கைக்குள் கடத்தி வரப்பட்டு இளம் சந்ததியினருக்கு மிகவும் மலிவாக விற்பனை செய்யப்படுவதினால் கோடிக்கணக்கான பணத்தை கடத்தல் காரர்கள் சம்பாதிக்கின்றார்கள்.

கஞ்சாவிற்பனைக்கு இக்குழுவினர் முக்கிய புள்ளிகள் ஆதரவு வழங்கி வருவதினால் வருங்காலத்தில் போதைப் பொருள் பாவனையை இலகுவில் கட்டுப்படுத்துவது மிகவும் கடினமாகவே இருக்கும்.

தற்போது இலங்கையில் வயது வேறுபாடின்றி ஒரு லட்சத்து 40 ஆயிரம் பேர் போதைப் பொருட்களைப் பாவிக்கிறார்கள். இவர்கள் போதைப்பொருள் பாவனைக்காக தினமும் 150 ரூபா முதல் 300 ரூபாவரை செலவு செய்வதினால். நாளொன்றுக்கு இலங்கையில் மொத்தம் 2 கோடியே 10 லட்சம் ரூபாய் பெறுமதியான போதைப் பொருட்கள் விற்பனையாகின்றது என்றுக் பொலிஸ்அதிபர் மேலும் தெரிவித்துள்ளார். வி-இ

றுவண்டா

(1ம் பக்கத் தொடர்ச்சி)

த இருநாட்டு ஜனாதிபதிகளும் கொல்லப்பட்டதையடுத்தே இந்த பெரும் மோதல் ஏற்படுவதாகவும் தெரிய வருகிறது

இந்தவாரம் துபாய் சம்பவத்தில் இருநாட்டு அரசியலையும் மென்மேலும் பாதிப்பு ஏற்படும் என்றும் அச்சம் தெரிவிக்கப்படுகிறது.

பாதுகாப்பு ஏற்பாடுகள் தீவிரமாக்கப்பட்டுள்ளபோதிலும் மேற்படி மோதலை தடுக்க முடியவில்லையென்றும் தெரிவிக்கப்படுகிறது.

இதனிடையே றுவாண்டாவில் மூன்று அமைச்சர்களும் அவர்களது குடும்பத்தவர்களும் ஆயுதக் குழு ஒன்றினால் கடத்திச் செல்லப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்படுகிறது. -இ

96 A|L

கணித - விஞ்ஞான வகுப்புக்கள்

NEW SCIENCE HALL
கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.

ஆசிரியர் குழு

இரசாயனவியல்	—	சிவசுப்பிரமணியம் B. Sc. (Hons)
பௌதிகவியல்	—	S. சோதிலிங்கம் B. Sc. (Special)
தாவரவியல்	—	V. S. குணசீலன் B. Sc. (Special)
விலங்கியல்	—	தம்பிராஜா B. Sc. (Hons) Dip. in Ed.
தூய/பிரயோக கணிதம்	—	குணசிங்கம் B. Sc. Dip. in Ed.

NEW SCIENCE ACADEMY
எழிலகம் முன்பாக, யாழ்ப்பாணம்.

ஆசிரியர் குழு

இரசாயனவியல்	—	A. மகாதேவா B. Sc.
பௌதிகவியல்	—	S. J. கணேசன் B. Sc. (Eng.)
தாவரவியல்	—	V. S. குணசீலன் B. Sc. (Special)
விலங்கியல்	—	சண்முகநாதன் B. Sc. (Hons)
தூய/பிரயோக கணிதம்	—	P. வெக்டர் வேலாயுதம் B. Sc.

புதிய வகுப்புக்கள் 09-04-1994 (சனி) முதல் ஆரம்பமாகவுள்ளன.

விண்ணப்பங்கள் யாவும் :

08 - 04 - 1994 (வெள்ளி) வரை மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும்.

(ஏ-3969)

யாழ்ப்பாணம்

மணிவாக்கு

புத்திசாலிக்கு வாழ்வு ஒரு பிரச்னை; முட்டாளுக்கு அது தீர்ந்த ஒன்று.

- மார்ஷல்

நமது நோக்கு

ஆட்டம் ஆரம்பமா?

வழக்கமாக நடாத்தும் மேதினப் பேரணியை இரத்துச் செய்துள்ளதாக ஐ. தே. க. அறிவித்துள்ளது.

மறைந்த பிரேமாவிற்கு அஞ்சலி செலுத்துவதற்காகவே இது இரத்துச் செய்யப்பட்டதாக காரணமும் கூறப்பட்டுள்ளது.

தென் மாகாணசபைத் தேர்தலுக்குப் பின் ஐ. தே. க. பிளவுபடுமென்றும், டீ. பீ. விஜயதுங்க ஜனாதிபதி தேர்தல் வேட்பாளராக நிறுத்தப்படலாம் என்றும் சரிசமன் செய்யப்படும் என்றும் பேசப்பட்டு வந்தது.

ஆனால் செயற்குழுக் கூட்டம் முடிவில், பிளவு எதுவுமில்லை என்ற ஜனாதிபதியின் அறிக்கையை நம்பத் தயாராக நிலையில் அரசியல் அவதானிகள் இல்லை.

பிளவைத் தடுக்க ஜே. ஆர். களத்தில் இறங்கியுள்ளார் எனவும், தொண்டமானைச் சந்தித்தார் எனவும் செய்திகள் வந்தன.

அதேவேளை, தொண்டமான் போடும் நிபந்தனைகளை ஏற்றால் தான் வேறு தொழிற்சங்கத்திற் சேர்ந்துவிடக் போவதாக செல்வச்சாமி மிரட்டியுள்ளார்!

செல்வச்சாமி— தொண்டமான் பிளவை உருவாக்கி மலையகத் தமிழரைப் பிரிக்க ஏகிய பிரசு ஏஜண்டுகளையே பிடித்துக் கொண்டிருக்கிறது!

இந்தப் பின்னணியில் தான், பிரேமாவின் பெயரைச் சொல்லி எல்லோரும் வெற்றி காணலாம் என்ற புதிய பல்லவி பாடத் தொடங்கியுள்ளார்கள்.

ஹேமாலை ஓரங்கட்ட எடுத்த முயற்சிதான் எத்தனை?

பிரேமாவின் இல்லத்தில் கட்டுக்கட்டாக பணநோட்டுகள் இருந்தன என்றோர் பரபரப்பான செய்தி வந்தது.

சொத்துக்குவிப்பு தரகர் செய்த ஹேமா குறைந்து மதிப்பீடு செய்துவிட்டார் என்றோர் கண்டனம்!

ஹேமா தலைவியாக இருந்த சேனா வனிதா இயக்கத்தின் வாகனங்கள் எங்கே? இதை ஓர் மர்மக் கதையாகி மகிழ்ச்சியடைவது அரசு சார்புப் பத்திரிகை!

ஜனாதிபதி மாளிகையில் இருந்த பொருட்கள் கணக்கெடுக்கப்பட்டபோது, மதிப்புமிக்க இரத்தினக்கல் மாயமாக மறைந்தது எப்படி? - இது இன்னோர் கேள்வி!

பிரேமாவை எதிர்த்த சாமினி பேரன்றோர் மீண்டும் வந்து மக்களைக் கைப்பற்ற எடுத்த முயற்சிக்குப் பிரேமா அஞ்சலி பலத்த ஆயுதமல்லவா?

பிற கட்சிகளை ஆட்டம் காண வைத்த ஐ. தே. க. வின் ஆட்டம் ஆரம்பமா?

மலஸ்தீனியர்

தற்கொலை படை தாக்குதல் ஒன்பது இஸ்ரேலியர் பலி

(ரெக் அலிவ்)

இஸ்ரேலில் நேற்று முன் தினம் இடம் பெற்ற பலஸ்தீனியரின் தற்கொலைப் படைத் தாக்குதலில் 9 ஸ்ரேலியர்கள் கொல்லப் பட்டனர். 30 பேர் காயமடைந்தனர்.

இஸ்ரேலின் வடபகுதியில் நேற்று முன்தினம் காலை தற்கொலையாளி ஒருவர் குண்டு பொருத்தப்பட்ட காரில் சென்று பயணிகள் பஸ் ஒன்றின் மீது மோதினார். அதனால் அந்த பஸ்ஸில் பயணம் செய்த 9 இஸ்ரேலியர் கொல்லப்பட்டனர். 30 பேர் காயமடைந்தனர்.

கடந்த மாதம் 25 ம் திகதி கெப்ரோன் பள்ளி வாசலொன்றில் யூத குடியேற்ற வாதியொருவர் துப்பாக்கி பிரயோகம் செய்ததில் 40 பேர் பலியான சம்பவத்திற்கு பழிவாங்கும் நடவடிக்கையாக பலஸ்தினிய ஹமாஸ் இயக்கம் இதனைச் செய்ததாக இஸ்ரேலிய பொலிசார் தெரிவித்தனர். (கே)

சங்காபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் - மயிலணி திருக்குடவாயில் ஸ்ரீ விஸ்வநாத சுவாமி கோவில் சங்காபிஷேகம் இம்மாதம் 10-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறும். அன்று நவராத்திரசஹஸ்ர சங்காபிஷேகம், பூஜை, திருவிழா என்பன பிற்பகல் 2மணி யளவில் ஆரம்பமாகி நடைபெறும்.

'பிறப்புச்சான்றிதழ் விண்ணப்பம் தட்டுப்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்ட பிறப்பு இறப்புப் பதிவாளர் அலுவலகம் 01 - 08 - 1954 க் ஆண்டுக்குப் பின் பிறந்தவர்களுக்கான பிறப்புச் சான்றிதழ் விண்ணப்பங்கள் மறு அறிவித்தல் வரை ஏற்றுக்கொள்ளப் படமாட்டாது என அறிவித்துள்ளது.

பிறப்புச் சான்றிதழ்களை எழுதும் பதிவாளர்களுக்குத் தட்டுப்பாடு நிலவுவதே இதற்குக் காரணமென்றும். இப்படிவங்கள் கொழும்பிலிருந்து எடுத்து வரப்பட்டதும் இந்தக் கால விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்வது பற்றி அறிவிக்கப்படுமென்றும் தெரிவிக்கப்படுகிறது. (162 - 166-கி)

கி. ஆ. சங்கம் கடனுதவி

(யாழ்ப்பாணம்)

வறுமடி மேற்கு சரஸ்வதி கிராம அபிவிருத்தி சங்கம் தனது எல்லைக்குட்பட்ட இதுவரையும் திருமணம் பதிவு செய்யாத குடும்பங்களுக்கு திருமணப்பதிவு செய்துவைக்க ஏற்பாடு செய்துவருகிறது.

வறிய கூலி விவசாயிகளுக்கு கடனுதவியும், குடும்பத் தலைவர்களை இழந்த பெண்களுக்கு சுய சார்பு தொழில் முயற்சிக் கடனும் மேற்படி சங்கத்தால் வழங்கப்படவுள்ளது. — கி

சிற்றூழியர் வெற்றிடம் நிரப்ப நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

வடக்கு - கிழக்கு மாகாண சேவையில் காலியாகி நிரப்பக் காத்திருக்கின்ற சிற்றூழியர் வெற்றிடங்களை நிரப்புவதற்காக நடத்தப்பட்ட நேர்முகப் பரீட்சையின் அடிப்படையில் எவருக்கும் நியமனம் வழங்கப் படவில்லை. இந்நியமனங்களை வழங்குவதற்கான அதிகாரம் மாகாணக் கல்வி அமைச்சுக்கு உரியதா அல்லது மாகாண உள்துறை அமைச்சுக்குரியதா என்னும் பிரச்னை காரணமாகவே இவ்விடயம் பற்றி எவ்வித முடிவும் செய்யப்படவில்லை. இவ்வறுமாழ் கலை I கல்விப் பணிப்பாளர் செல்வி நி. பெரியதம்பி தெரிவித்தார்.

இதேவேளை 1992-02-19ம் திகதியிட்ட 8/92 ஆம் இலக்க அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கையின் பிரகாரம் நிரந்தர நியமனம் வழங்கப்படுவதற்காக 77 ஆண்டு / நிர்வாணம் பணியாளர்களின் பெயர்கள் மாகாணக் கல்வி அமைச்சுக்கு அனுப்பிவைக்கப்பட்டது. இவர்களில் 42 சிற்றூழியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்பட்டுவிட்டது. ஏனையோருக்கும் காலதாமதமின்றி நிரந்தர நியமனம் வழங்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது என்றும் அவர் தெரிவித்துள்ளார். —கி

க. பொ. த(சா/த) பரீட்சை மேலும் சில முடிவுகள்

சாவகச்சேரி:

சாவகச்சேரி இந்து
7 D 1 C ஒருவர் 6 D 2 C ஒருவர் 6 D 2 S இருவர் 5 D பத்துப் பேர் 4 D நாலு பேர் 3 D 13 பேர்.

சாவகச்சேரி டிறிபேக்
6 D 2 C ஒருவர் 5 D 2 C ஒருவர் 5 D 1 C 1 S ஒருவர் 4 D 3 C 1 S ஒருவர் 4 D 2 C 1 S ஒருவர் 4 D 1 C 2 S ஒருவர்.

சாவகச்சேரி மகளிர்
3 D 4 C (சங்கீதம் வாய்பாட்டு) ஒருவர் 3 D 3 C 1 S இருவர் 3 D 4 S (சங்கீதம் வாய்பாட்டு) ஒருவர்.

கொழுவாமடு திருநாவுக்கரசு ம. வி.
2 D 3 C 3 S ஒருவர் 2 D 3 C 1 S ஒருவர்.

புங்குடுதீவு ம. வி.
6 D 1 C ஒருவர்.

புங்குடுதீவு ஸ்ரீ கணேசா
2 D 3 C 2 S.

நீர்வேலி அந்திமார் இந்து
6 D 1 C 1 S ஒருவர் 3 D 1 C 1 S ஒருவர் 2 D 4 C 1 S ஒருவர் 2 D 3 C 2 S இருவர் 2 D 3 C 1 S மூவர் 2 D 1 C 3 S ஒருவர்.

சண்டிலிப்பாய் இந்து ம. வி.
3 D 3 C 1 S இருவர் 2 D 4 C 1 S ஒருவர் 2 D 3 C 1 S ஒருவர் 1 D 3 C 2 S மூவர்.

உடுவில் இராமநாதன்
6 D 1 C 1 S ஒருவர், 3 D 3 C 1 S இருவர், 2 D 4 C 1 S ஒருவர், 2 D 3 C 2 S மூவர், 2 D 3 C 2 S இருவர் 2 D 1 C 4 S இருவர்

காரைநகர் நடேஸ்வரா
3 D 3 C 2 S ஒருவர் 3 D 3 C 1 S ஒருவர். 3 D 3 C 1 S ஒருவர், 2 D 3 C 2 S இருவர்.

தெல்லிப்பழை மகாஜனா
6 D 2 S ஒருவர், 6 D 1 C 1 S ஒருவர், 6 D 2 C ஒருவர், 6 D 1 C ஒருவர், 5 D 1 C 1 S ஒருவர், 5 D 2 C 1 S ஒருவர் 5 D 2 C ஒருவர், 4 D 3 C இருவர், 4 D 2 C 2 S இருவர். 4 D 2 C 1 S ஒருவர்.

தெல்லிப்பழை யூனியன்
6 D 1 C இருவர், 5 D 1 C இருவர், 5 D 2 C ஒருவர். 3 D 3 C ஐவர், 3 D 4 C இருவர், 3 D 3 C 1 S ஆறு பேர், 3 D 2 C 2 S இருவர்.

உருத்திரபுரம் இந்து
4 D 4 C

இன்று

(பண்டிதர்தீர்ப்பு)

வாடகைக்கார் முதலாம் தவணை விடுமுறைக்காக இன்று 8-ம் திகதி வெள்ளிக்கிழமை மூடப்படும் இரண்டாம் தவணைக்காக இம் மாதம் 26-ம் திகதி ஆரம்பமாகவுள்ளது. -72

0 0 0

(பண்டிதர்தீர்ப்பு)

களவெட்டி அருணாசலம் வித்தியாலயத்தில் தமிழ் தினவிழா இன்று 8 ம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது. சண்முகவிப்பாய், தெல்லிப்பழை கலைவிநோதக்களின் பிரதிக்கல்விப் பணிப்பாளர் திரு. த. துரைசிங்கம் இவ்விழாவிற் பிரதம அதிதியாக வந்து கொள்வார். -72

0 0 0

(ஆனைப்பந்தி)

தியாகக்கூடல் அன்னை பூபதியின் ஆறாம் ஆண்டு நினைவை வெளிப்படுத்தும் விழிப்பு மகளிர் அமைப்பின் தீவகக் கோட்டத்தினரால் இன்று 8 ம் திகதி மாலை 7 மணியளவில் நினைவு முன்னாலும் "விரியன் குடியிருப்பு" 16-ம் திகதி நவாலி மயூரன் குடியிருப்பிலும் சிரமதானமும், நினைவுக் கூட்டமும் நடாத்தப்படவுள்ளன. -101

0 0 0

(ஆனைப்பந்தி)

இலங்கை கூட்டுறவு முன்னணி நிறுவனத்தினால் நடாத்தப்படும் "கூட்டுறவு அபிவிருத்திக் கூடம்" இன்று 8 ம் திகதி வெள்ளிக்கிழமை காலை 11 - மணிக்கு மாவட்ட கூட்டுறவு சபை மண்டபத்தில் சபைத்தலைவர் திரு. வை. செந்தில்நாதன் தலைமையில் நடைபெறும். -101

புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

1994 - 04 - 08

வெள்ளி இரவு

8-01 அன்னை பூபதி நினைவாக் சிறப்பு நிகழ்ச்சி "அணையாத தீபம் அன்னை பூபதி"
8-10 கலைமஞ்சரி - நிகழ்ச்சியில் முதலிடத்தை "அம்மா" அடுத்து கவிதை "நண்பனே"
8-30 செய்திகள்
8-40 அரசியல் அரங்கம் "தென்னாபிரிக்காவில் திடீர் திருப்பங்கள்"
8-50 வரலாறு காணாதவை

1994 - 04 - 09

சனி காலை

7-02 மாவீரர் வணக்கம்
7-15 அன்னை பூபதி நினைவாக சிறப்பு நிகழ்ச்சி "போர்க்களத்துப் பூவான அன்னை பூபதி"
7-25 நீங்கள் கேட்டவை
7-45 செய்திகள்
7-50 பத்திரிகைச் செய்திகள்
7-55 தாயகப்பாடல்

இராசி பலன்

8-4-1994

வெள்ளிக்கிழமை

(தமிழுக்கு பங்குனி 26)

திரயோதசி பி. இ. 2-48 வரை; பூரட்டாதி முழுவதும் சித்தயோகம். இராகுகாலம் காலை 10-37 முதல் 12-07 வரை நேரம் காலை 6-07 முதல் 7-37 வரை. பிரதோஷ விரதம்

மேடம்: நண்பர்கள் பாராட்டுதல். குழம்பித் தெளிதல், பயண வெற்றி.

இடபம்: எதிர்பார்த்தவை நடக்கும், காரியானுகூலம், குடும்ப சுகம்.

மிதுனம்: வாக்குவாதம், உறவினர் சங்கடம், அலைச்சல்.

கடகம்: அதிருப்திகரமான நிலை, வைத்திரச் செலவு, கடன்படல்.

சிங்கம்: புதிய முயற்சி, இடம் பெயர்வு, விருந்துபசாரம்.

கன்னி! மனமாற்றம், தொழில் மேன்மை, புதிய உறவு.

துலாம்: திட்டம் தோல்வி, கண்ணில் உபாதை, வேதனை.

விருச்சிகம்: தவறான எண்ணம், அதிகாரிகளால் பயம், கோபம்.

தனுசு: தொழில் மதிப்பு, பெரியோர் அறிவுரை, மனக்களிப்பு.

மகரம்: நிச்சயமற்ற தன்மை. முரண்பாடு, குடும்பப் பிரிவு.

கும்பம்: புதிய வருவாய், உல்லாச போக்கு, தாயார் உதவி.

மீனம்: உதாசீனம், மனவேதனை, உடல் உபாதை.

- ஜோஸ்யன்.

மலைகலைக்கழக ஊழியர் தொழிற்சங்க கூட்டம்

(யாழ்ப்பாணம்)

கொழும்பில் நடைபெறும் பல்கலைக்கழக ஊழியர் தொழிற் சங்கங்களின் கலந்துரையாடலில் யாழ்மாணப் பல்கலைக் கழக ஊழியர் சங்கத்தை கலந்து கொள்ளுமாறு கூறி கல்வி அமைச்சு அழைத்துள்ளது-

இதன் பிரகாரம் யாழ். பல்கலைக்கழக ஊழியர் சங்க உபதலைவர் திரு. எம்வேலு ராஜா கொழும்பு பயணமானார்.

இன்று 8.ம் திகதி பல்கலைக்கழக விவகார அமைச்சர் திஸ்ஸ அத்தநாயக்காவினால் இக்கூட்டம் கூட்டப்படுகிறது என்று செய்திகள் தெரிவிக்கின்றன. [ம - கி]

காட்டில் மரங்களைத் தறிக்காதீர்
நாட்டின் வளங்களைக் குறைக்காதீர்

சீன படகு விபத்தில் 40 மாணவர் பலி

பீகிங்

சீனாவில் படகு விபத்தொன்றில் 40 பாடசாலை மாணவர்கள் பலியாகியுள்ளனர்.

பாடசாலை விடுமுறையை கழிப்பதற்காக படகொன்றில் உல்லாச பயணம் சென்ற இவர்களின் படகு திடீரென ஆற்றில் மூழ்கியதால் இந்த பரிதாப மரணம் நிகழ்ந்ததாக பொலிஸார் தெரிவித்தனர். —வி

அரசுக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணை மீது நாடாளுமன்றில் 20 விவாதம்

(தொழும்பு)

ஜனாதிபதி டி. பி. விஜேதுங்காவின் தலைமையிலான ஐ. தே. க. அரசுக்கு எதிராக எதிர்க்கட்சிகள் கொண்டு வந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை மீது நாடாளுமன்றத்தில் விவாதம் நடத்துவதற்கு சபாநாயகர் ஜனாப் எம். எச். முஹம்மது சம்மதம் தெரிவித்துள்ளார்.

கனேதிருக்கட்சிகளின் தலைவர்கள் சபாநாயகரை சந்தித்துப் பேச்சுக்கள் நடத்தியதன் நிமித்தம் மேற்படி பிரேரணை மீது இம்மாதம் 20 ம் திகதி நாடாளுமன்றத்தில் விவாதம் நடாத்துவதற்கு அனுமதி வழங்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. —வி இ

பரீட்சை முடிவுகள்

தாமதமானது குறித்து கல்வி பணிப்பாளர் அறிக்கை

(யாழ்ப்பாணம்)

க. பொ. த (சா-த) டிசம்பர் 1993 பரீட்சைப் பெறுபேறுகளைப் பருத்தித்துறையிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு எடுத்துவருவதிலேற்பட்ட தாமதம் குறித்து மாணவர்களும் பெற்றோரும் கரிசனை கொண்டுள்ளனரென ஒரு கருத்து நிலவுவதாகத் தெரிகிறது. யாழ்ப்பாண கல்வி திணைக்களம் கலைமகள் II, கலைமகள் II என்பவற்றிற்கு தகவேற்ற ஓர் ஒப்பேடு வரைகணமேயுள்ளது. இவ்வாகனம் ஒவ்வொரு திங்கட்கிழமையும் செவ்வாய்க்கிழமையும் வரைதிக்கு முதற் சனிக்கிழமையும், மூன்றாம் சனிக்கிழமையும் கலைமகள் II கல்வி பணிப்பாளரினால் உபயோகிக்கப்படுகின்றது.

1994 ஆகஸ்ட் க. பொ. த. (உ-த) பரீட்சை, ஆண்டு 5புலமைப் பரிசில் பரீட்சை-1994 என்பவற்றுக்கான விண்ணப்பங்களைப் பாடசாலைகளிலிருந்து சேகரித்துப் பரீட்சைத் திணைக்களத்திற்கு அனுப்புவதற்கு முன்னுரிமையளித்து நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

எவ்வாறாயினும் பெறுபேறுகளை எடுத்து வருவதற்கு கலைமகள் II அலுவலகத்திலிருந்து ஒப்பேடு வாகனம் பருத்தித்துறைத் தபாலகத்துக்குச் சென்றபோது பெறுபேறுகளைக் கொண்டு வந்த அதிகாரி பருத்தித்துறையிலிருந்து புறப்பட்டு விட்டதாக தெரிய வந்தது.

இன்று எம் பிரதேசத்தில் பேக்குவரத்து வசதிகளோ, தொலைத் தொடர்பு வசதிகளோ இல்லாமையால் திணைக்களம் திறம்படச் செயலாற்ற முடியாதுள்ளது பெற்றோர்கள் ஓர் ஒப்பேடு வாகனத்தையும் தொலைதொடர்பு சாதனத்தையும் தந்துதவக் கூடியவர்களாயிருப்பின் எம் மாவட்டவாசிகளும் திறமையாகவும் செயற்பட முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன் என அந்த அறிக்கையில் தெரிவித்துள்ளார். -இ

பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ் மக்களுக்கு விஞ்ஞானபீட மாணவர்களுடைய பொதுக்கூட்டம் ஒன்று இன்று காலை 10 மணிக்கு நடைபெற உள்ளது. சகல விஞ்ஞானபீட மாணவர்களையும் இதில் தவறாது கலந்து கொள்ளுமாறு விஞ்ஞான பீட மாணவர் ஒன்றியம் கேட்டுக்கொண்டுள்ளது.

மென்ஷன் வவுச்சர்

(மானிப்பாய்)

உள்ளூராட்சித் திணைக்கள ஊழியர்களினதும் ரயில்வே திணைக்கள ஊழியர்களினதும் ஏப்ரல் மாதத்திற்குரிய மென்ஷன் வவுச்சர்களை உரியவர்களுக்கு யாழ் செயலக ஒய்வூதியப் பிரிவிலிருந்து நேற்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. —71 இ

முல்லையில் ஐயபூமி நடவடிக்கை

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் 'ஜயபூமி' இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாக இராணுவ வட்டாரங்கள் நேற்று தெரிவித்தன. -வ

சீமெந்து ஊழியர் சம்மேளனம்

(யாழ்ப்பாணம்)

வல்லை சீமெந்து நிறுவன ஊழியர்களின் மாசி, ஏப்ரல் ஆகிய இரண்டு மாதச் சம்பளக் கொடுப்பனவு பணியை முற்பணத்துடன் சேர்த்து நாளை சனிக்கிழமை மட்டும் காலை 8-30 மணி தொடக்கம் பிற்பகல் 3 30 மணி வரை யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியிலுள்ள வங்கிக்கிளையில் வைத்து வழங்கப்படுமென வல்லை சீமெந்து நிறுவனம் அறிவித்துள்ளது. (இ)

பொலிஸாருக்கு பதவி உயர்வுகள்

(கொழும்பு)

நீண்ட காலம் சேவை புரிந்த பொலிஸ் கான்ஸ்டபிள்கள், பொலிஸ் சார்ஜன்டுகள், சப் இன்ஸ்பெக்டர்கள் ஆகியோருக்கு பதவி உயர்வு வழங்கும் திட்டம் ஒன்று விரைவில் அமுல் நடாத்தப்படவுள்ளது.

இதற்கான பணிப்புரை ஜனாதிபதி டி. பி. விஜேதுங்காவினால் பொலிஸ் மா அதிபருக்கு விடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் திணைக்களம் தெரிவித்தது.

இதன்படி 20 வருட காலம் சேவையாற்றிய பொலிஸ் கான்ஸ்டபிள்கள் பதவி உயர்வுக்கு உரித்துடையவர்கள் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

15 வருட காலம் சேவை யாற்றிய பொலிஸ் சார்ஜன்டுகள் பொலிஸ் இன்ஸ்பெக்டர்களாக பதவி உயர்வு பெறுவர் என்றும் அறிவிக்கப்படுகிறது.

திறமை, போட்டிப் பரீட்சை ஆகியவற்றுக்கு மேலாக மேற்படி நியமனங்கள் வழங்கப்படும் என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டது. —வ-இ

ஐ. தே. க. தோல்விக்கு இதுவும் ஒரு காரணம்

(கொழும்பு)

காலஞ்சென்ற ஜனாதிபதி ஆர். பிரேமதாசா ஆரம்பித்த பாடசாலை மாணவர்களுக்கான இலவச சீருடை திட்டத்தையும், கதிர் போசனத் திட்டத்தையும், தற்போதைய ஜனாதிபதி டி. பி. விஜேதுங்காவின் நிர்வாகம் நிறுத்தி விடுவதற்கு முடிவு செய்துள்ளதும், ஐ. தே. க. வுக்கு மாகாணசபைத் தேர்தலில் தோல்வியடைவதற்கு ஒரு காரணமாக அமைந்துவிட்டதென்று பொலிஸ் வாரஒலி நேற்று தெரிவித்தது.

இதன்காரணமாகவே எதிர்கால பலப்படுத்தும் நோக்குடன் பாடசாலை மாணவர்களிடம் இந்த இலவச நலத்திட்ட உதவிகளை மீண்டும் தொடங்கப்போவதாக அரசு தற்போது அறிவித்துள்ளது எனறு பொலிஸ் மேலும் தெரிவித்தன. —வி-இ

பண்பாட்டுப் பவனி

(காழ்ப்பாணம்)

விடுதலைப்புலிகள் மாணவர் அமைப்பு நடாத்துகின்ற பண்பாட்டுப்பவனி இன்று முதல் எதிர்வரும் 25ம் திகதி வரை மன்னார், வவுனியா, முல்லை ஆகிய மாவட்டங்களில் நடைபெறும்.

கூட்டம்

(யாழ்ப்பாணம்)

மாணவர் மதிய உணவு முதியோர் தொடர்பான கூட்டம் இன்று காலை 10-00 மணிக்கு யாழ். செங்கைஆழியான் மன்றில் நடைபெறும்.

சகல உதவி அரசாங்க அதிபர்களும் இக் கூட்டத்தில் கலந்து கொள்ளும்படி யாழ் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி பத்மினி மகிழ் நாகலிங்கம் கேட்டுக்கொள்ளார். 162-

சுகாதார தின விழா

(யாழ்ப்பாணம்)

உலக சுகாதார தினத்தை முன்னிட்டு யாழ். மாநகர சபை சுகாதாரப்பகுதியினரால் நேற்று காலை யாழ். நாவலர் கலாசார மண்டபத்தில் சுகாதார தின விழா கொண்டாடப்பட்டது.

கலந்துகொண்ட கலாநிதி இ. தெய்வேந்திரன் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவை யாழ் மாநகரசபை கணக்காளர் தனபாலசிங்கம் ஆரம்பித்து வைத்தார். —162-இ

அகதி முகாம்களுக்கு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கூடு திரட்டுமாறும் அகதிகள் தற்போது மாவட்ட கலெக்டர்களுடன் தொடர்பு கொள்ளுமாறும் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

அரசின்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கூடையை இப்போது ஆரம்பித்துள்ளது.

இந்த விசாரணையிலிருந்து பெறப்படும் தகவல்களை எதிர்வரும் பொதுத்தேர்தலிலும், ஜனாதிபதித் தேர்தலிலும் எதிர்க்கட்சி அதன் பிரசார நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தும் என தெரியவந்துள்ளது.

இந்த விசாரணையை மேற்கொள்ளவுள்ள படை அதிகாரிகளுடன் எதிர்க்கட்சியினர் மிக நெருங்கியதாக இருந்து செயலாற்றி வருவதாகவும் அறிந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. -இ

வேராதனை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வரான கிச்சிட் பத்திரன ஏஜென்சி செய்திகளுக்கு தெரிவித்தார்.

உயர்கல்வி அமைச்சர் அநுராபண்டார நாளை வெளிநாடு சென்றிருப்பதால் இந்த விவாதத்திற்கு அனுமதி வழங்க முடியாதிருப்பதாக அமைச்சர் தமக்குத் தெரிவித்ததாகவும் பத்திரன மேலும் தெரிவித்தார். -இ

மூதூர்

(1- பக்கத் தொடர்ச்சி)

விமானம் ஒருக்கப் தாக்குதலுக்கு உள்ளாகி கிறறி வெடித்ததில் இருவரும் பலியாகினர்.

இவர்களுடன் பிரயாணம் மேற்கொண்ட வேறு இரு நாடு பிரமுகர்களும் கூடவே பலியாகினர். —கே இ

நவசமசமாஜக்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மதிப்பிறிமாமாவோ பண்டாரநாயகாவின் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்திற்கு இவர் சென்று சுதந்திரக்கட்சியில் சேர்ந்து கொண்டதாக தெரிவிக்கப்பட்டது.

நவசமசமாஜக்கட்சியைச்சேர்ந்தஒரேஒரு மாகாணசபை அங்கத்தவர் கிறிபாலகிரிகல என்பது குறிப்பிடத்தக்கது

எந்தவித ஒளியும் இல்லாத நவசமசமாஜக் கட்சிக்குள் இருப்பதைவிட பொதுஜன ஐக்கிய முன்னணியில் இணைந்து மக்களுக்கு சேவையாற்றுவது எவ்வளவோ மேலானது என திரு கிரிகல தெரிவித்துள்ளார். (இ)

11 பட்சம்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வாற்றியபோது கூறியதாவது:

ஐக்கியதேசியக்கட்சி அரசின் பொருளாதார கொள்கையின் கிறு குறைபாடுகள் இருந்தாலும் திறந்த பொருளாதாரக் கொள்கை காரணமாக பொதுமக்களுக்குத் தேவையான சகல பொருட்களுமே கிடைக்கின்றன.

குறை கூறுவதற்கு ஒன்று இருக்குமாயின் இந்த பொருட்களின் விலை அதிகரிப்பே யாகும்.

திருமதி சந்திரிகா குமாரணதுங்காவும் எமது திறந்த

பொருட்களுடன் வரும் வாகனங்களை சோதனையிடுவது கட்டுப்படுத்த வேண்டும்

வவுனியா வர்த்தகர்கள் கோரிக்கை

(வவுனியா)

பொருட்களை ஏற்றி வரும் வாகனங்கள் மீது படையினர் மேற்கொள்ளும் சோதனை நடவடிக்கைகளை கட்டுப்படுத்தப்பட வேண்டுமென வவுனியா வர்த்தகர்கள் ஸ்ரீலங்கா அரசுக்கு கோரிக்கைவிடுத்துள்ளனர்.

இது தொடர்பான மகஜர் ஒன்று வவுனியா அரச அதிபர் ஊடாக கொழும்பிற்கு அனுப்பப்படுவதாக அறியவருகிறது.

அம்மகஜரில் மேலும் தெரிவிக்கப்படுவதாவது: வவுனியாவிலிருந்து பொருட்களை ஏற்றிச் செல்லும் லொறிகள் வவுனியாவுக்கும் மடு மேவுக்கும் படையினரால் சோதனை செய்யப்பட வேண்டும்.

அத்துடன் குறிப்பிட்ட லொறிகள் கூடுறவு மொத்த விற்பனவு நிலையத்திலிருந்து பொருட்களை கொண்டு செல்லும் லொறிகளுடன் செல்வதற்கு அனுமதிக்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

வவுனியாவில் பொருட்களை ஏற்றிக்கொண்டு வடபகுதி செல்லும் லொறிகள் அடிக்கடி படையினரால் சோதனை செய்யப்படுவதால் கால தாமதமும் பொருட்களின் விலை ஏற்றத்திற்கும் அது தூண்டுகோலாகும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. - வ-இ

மணலாறு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மேற்கொண்டன.

மணலாறு கரைதோராப் பகுதி இராணுவ முகாமிலிருந்து இப்பகுதியை நோக்கி ஆயுதங்களை ஷெல் தாக்குதலும் மேற்கொள்ளப்பட்டது.

இத்தாக்குதல்களினால் மரங்கள் முறிந்து விழுந்ததாகவும் உயிர், உடமை இழப்புகளோ அல்லது சேதமோ ஏற்பட்டதாக இதுவரையில் தகவல் இல்லையெனவும் சம்பந்தப்பட்ட தரப்பினர்கள் தெரிவித்துள்ளன.

இச்சமயம் அவதியுற்ற பகுதியில் ஒன்று வீச்சு விமானம் ஒன்று குப் பகுதியை வட்டமிட்டதில் பாடசாலை மாணவர்கள் பாடசாலையை விட்டு அச்சத்துடன் வெளியேறியதாகவும் தெரிய வருகிறது. - வ

பொருளாதார கொள்கையை ஏற்றுக்கொண்டிருப்பது

இதில் குறிப்பிடத்தக்கது என்றார். —இ

தமிழீழ

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சாக்றிதழ்களுக்கு இன்று வழங்கப்படவுள்ளன.

யாழ். மாவட்டத்தின் சகல கல்வி கோட்ட மாணவர்களுடன் கிளிநொச்சி கல்வி வலயத்தில் பல கல்வி கோட்ட மாணவர்களுக்கும் யாழ்ப்பாணத்தில் வைத்து மேற்படி பரிசில்கள் வழங்கப்படும். —வ

திருமலையில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

வடக்கில் பலாலி பகுதியிலும் படையினர் இராணுவ நடவடிக்கைகளை மேற்கொண்டுவருவதாகவும் தெரிவிக்கப்பட்டது. —வ இ

இப்பத்திரிகை "சுதந்திரம்" லிமிடெட் கிளையகத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1994ம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 8-ம் திகதி அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News paper at the General Post Office Sri Lanka under Licence Number B/10336/B